தமிழ் நாடு அரசு

சுருக்கம்

பிற்படுத்தப்பட்டோர்/மிகப் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் நலம்
பிற்படுத்தப்பட்டோர்/மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் குடும்பத்தைச்
சேர்ந்த முதல் மாணவர்களுக்கு தொழில் கல்வி பயில வழங்கப்படும் இலவசக் கல்வி
சலுகையை இந்திய மருத்துவ கல்விக்கும் அளிக்க - ஆணை பிறப்பிக்கப்பட்டது.

---

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை

அரசாணை நிலை எண். 76

நாள் : 17.11.1993
(கார்த்திகை 2, ஸ்ரீமுக,
திருவள்ளுவர் ஆண்டு 2024)

பார்வை :

1. அரசாணை நிலை எண்.81, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, நாள்:26.4.90.
2. அரசாணை நிலை எண்.79, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, நாள்:7.11.91.
3. மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநர் கடித எண்.பி1/7704/91, நாள்:29.7.91, 28.12.92 மற்றும் 14.6.93.

-------

ஆணை :

பார்வை ஒன்றில் கண்டுள்ள அரசாணையில் மிகப் பிற்படுத்தப்பட்டோர்
மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சேர்ந்த முதல் மாணவர்களுக்கு (First
Generation) மருத்துவம், பொறியியல், சட்டம், விவசாயம், மற்றும்
கால்நடைக் கல்வி ஆகிய தொழிற்கல்விகளுக்கு இலவசக் கல்வி சலுகை,
சில நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. பார்வை இரண்டில்
கண்டுள்ள அரசாணையில் பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சார்ந்த முதல்
மாணவர்களுக்கும் (First Generation) தொழிற்கல்வி பயில இலவசக்
கல்வி சலுகையை, சில நிபந்தனைகளுக்குட்பட்டு, வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

2. மேற்கண்ட ஆணைகளில் பொதுவாக மருத்துவம் என்றே
குறிப்பிடப்பட்டுள்ளது. மருத்துவம் படிப்பின் கீழ் ஆங்கில மருத்துவ முறை
மற்றும் இந்திய மருத்துவ முறைகளும் அடங்கும் என்றும், இத்திட்டத்தின் கீழ்
ஆங்கில மருத்துவத்திற்கு (M.B.B.S.) மட்டுமே இச்சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளது
என்றும் மேற்குறிப்பிட்ட அரசாணைகளில் பொதுவாக மருத்துவம் என்றே
குறிப்பிடப்பட்டுள்ளதால் இந்திய மருத்துவ முறைகளான யுனானி, சித்தா,
ஆயுர்வேதம், மற்றும் ஹோமியோபதி ஆகிய மருத்துவப் படிப்புகளுக்கும்
இலவசக் கல்வி சலுகை அளிக்கலாம் என்பதற்கு தெளிவுரை பிறப்பிக்குமாறு
கேட்டு மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநர்
செயற்குறிப்பு அனுப்பியுள்ளார்.

(த.பி.பா.)

3. மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநரின் செயற்குறிப்பு ஆய்ந்து பரிசீலிக்கப்பட்டது. பார்வையில் கண்டுள்ள அரசாணைகளில் தொழிற்கல்வியில் இலவசக்கல்வி சலுகை பெற விதித்துள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, ஆங்கில மருத்துவம் ( M.B.B.S. ), ப பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த மாணவர்கள் பெற்றுவரும் இலவசக்கல்வி சலுகையை இந்திய மருத்துவத்தின் பிரிவுகளான யுனானி ( B.U.M.S. ) சித்தா (B.S.M.S. ) ஆயுர்வேதம் ( B.A.M.S.) மற்றும் ஹோமியோபதி (B.H.M.S. ) போன்ற முழுநேர (Regular Course ) பட்டப்படிப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கும் அளிக்கலாம் என அரசு ஆணையிடுகிறது.

4. இந்த ஆணை நிதித்துறையின் ஒப்புதலுடன் அலுவல் சார்பற்ற குறிப்பு எண். 4690/FS /P/93, நாள்: 10.9.93ல் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ். குபிலன்
அரசு செயலர்

பெறுநர்:

மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநர், சென்னை-5.
பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்குநர், சென்னை-5.
மருத்துவக் கல்வி இயக்குநர், சென்னை-5.
இந்திய மருத்துவக் கல்வி இயக்குநர், சென்னை-40.
தொழில்நுட்ப கல்வி இயக்குநர், சென்னை-25.
பதிவாளர், டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம், சென்னை.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை-18.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை-35.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை-6.

நகல்:

நிதித்துறை, சென்னை-9.
நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை, சென்னை-9.
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை-9.

/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.